**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**
**P203 படைப்பிலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பண்டைக் காலத்திலிருந்த இரு நாடக நூல்களை எழுதுக.
2. இசைப்பாடல் வகைகள் யாவை?
3. புதுக்கவிதையில் முரண்தொடை அமைத்துப் பாடியவர் யார்?
4. ஆசிரியப்பாவில் அமைந்த நூல்கள் இரண்டினைக் கூறுக.
5. படைப்பிலக்கியத்திற்குத் தேவையான மூன்று அடிப்படைகள் யாவை?
6. வரதட்சணை வாங்குவது பற்றி காந்தியடிகளின் கருத்து என்ன?
7. குடும்பச் சிக்கலுக்குரிய சிறுகதைகளை எழுதுவதில் குறிப்பிடத் தகுந்தவர் யார்? குறிப்பிட்ட சிறுகதையின் பெயர் என்ன?
8. தமிழில் தொடக்கக்கால நாவலாசிரியர்கள் மூவரின் பெயரைக் குறிப்பிடுக.
9. கதையின் தொடக்கம் எவ்வாறு அமைய வேண்டும்?
10. தமிழில் பெண்கள் படும் இன்னல்கள் குறித்து நாவல்கள் எழுதிய நாவலாசிரியர்களை அவர்கள் எழுதிய நாவலுடன் குறிப்பிடுக.
11. துப்பறியும் புதினங்கள் எழுதியவர்களில் புகழ் பெற்றவர்கள் இருவரைச் சுட்டுக.
12. புறநானூறு கூத்து நடைபெறும் இடத்தை எவ்வாறு குறிக்கிறது?
13. சிறுவர்களுக்காக நாடகம் இயக்குபவர் யார்? அவருடைய குழுவின் பெயர் என்ன?
14. உரை வேந்தர் என்று அழைக்கப்பட்டவர் யார்?
15. திருக்குறளுக்கும் பரிபாடலுக்கும் உரை எழுதிய உரையாசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. படைப்பிலக்கியத்தின் பயன்கள் நான்கினை எழுதுக.
2. நேரிசை வெண்பாவின் யாப்பிலக்கணத்தைக் கூறுக.
3. சிறுகதையின் மொழிநடை எவ்வாறு அமைதல் வேண்டும்?
4. பாத்திரப் படைப்பின் இன்றியமையாமையைக் குறிப்பிடுக.
5. 'உரை' என்பதற்கு அகராதிகள் கூறும் விளக்கங்களை எழுதுக.
6. சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத்திற்கு ஆற்றிய பணிகளைச் சுட்டுக.
7. புதுமைப் பித்தனின் உரைநடைச் சிறப்புகளைக் கூறுக.
8. தலித் நாடக அரங்கில் கே. ர. குணசேகரன் ஆற்றிய பணிகளைப் புலப்படுத்துக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) படைப்பாளனின் தகுதிகளையும் பண்புகளையும் விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) கவிதை வரலாற்றில் மரபுக் கவிதையும் புதுக்கவிதையும் பெறும் இடத்தை மதிப்பிடுக.

2. (அ) தமிழ் நாவல் இலக்கியத்தில் பாத்திரப்படைப்பு பெற்றுள்ள இடத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்ச் சிறுகதைகளில் காணப்பெறும் தத்துவ நெறிகளை ஆராய்க.

3. (அ) தற்கால நாடகப் போக்குகள் குறித்து விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) ஐரோப்பியர் வருகையால் தமிழ் உரைநடை வளர்ச்சி பெற்றதைத் தொகுத்துரைக்க.

***